1991 செப்டம்பர் 13]

கிடைக்காமல், அதிகமாக எனது தொகுதி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாவார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவில், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல, அரிசிதான் அரசியல் என்பது போல, என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்த அளவில், முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிற எனது சட்டமன்றத் தொகுதியில், தண்ணீர் தான் அரசியலாகிக் கொண்டிருக்கிறது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியபின், கடனா நதி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவைப் பெரிதுபடுத்தி, அதன்பின், மேல்மட்டக் கால்வாய்க்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில் ** ஒருவர் என்றிருக்கிறது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி, 'தனி நபர்' ஒருவர் என்று மாற்றிக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனா நதி நீர்த்தேக்கத் திட்டத்தைப் பொறுத்த மட்டில், மேல்மட்டத்தில் வலதுபுறக் கால்வாய் வெட்டும் குறிப்புகள் பற்றிதான் வினா எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் முழு திட்டத்திற்கும் சம்பந்தமான விவரங்களை உறுப்பினர் கேட்டிருக்கிறார். அது சம்பந்தமாக தனிக் கேள்வியை அவர் கேட்டால், அதுகுறித்து விவரமான பதில் இங்கு தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்.25, டாக்டர் திருமதி சு. மணிமேகலை, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

25—

சத்துணவு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு.

*1251 டாக்டர் திருமதி. சு. மணிமேகலை :
திரு. எஸ். எஸ்.ராமசுப்பு :
திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் அமைப்பாளர்கள், சமையலாளர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கு ஊதிய உயர்வு அளிக்க அரசு முன்வருமா ?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 67,890 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மையத்திலும், ஒரு அமைப்பாளரும், ஆயாக்கள் இருவரும் என்ற அடிப்படையில் ஏறத்தாழ 2,04,000 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு கூடுதலாக 5 ரூபாய் குறைந்தபட்சம் கொடுப்பது என்றாலும், ஓராண்டிற்கு அரசுக்கு ரூபாய் 40 லட்சத்திற்கு கூடுதல் செலவாகும். என் தாயினும் இனிய செல்வி, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்று, குறுகிய காலமே ஆகியிருக்கிறது. அரசுக்கு இன்றைக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியில், இப்போதைக்கு அரசுக்கு அந்த எண்ணம் இல்லை.

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லையென்றாலும், at least in due course இது நடைமுறைக்கு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பகுதிநேர நிரந்தரப் பணியாளர்கள். 1989-இல் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமலாக்கப்பட்டபின், 5 ரூபாயும், 10 ரூபாயும் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அடுத்த ஊதியக் குழு, மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அமைக்கப்படுகிறபோது, அவர்களுக்கு அதைவிட அதிகமான அளவில் உதவி செய்ய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்வார்கள்.

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது நடைமுறைக்கு வரும்? அப்படி வரும் சமயத்தில் மற்ற அரசு ஊழியர்களைப்போல, சத்துணவு ஊழியர்களுக்குப் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல, அடுத்த ஊதியக் குழு வருகிறபோது, அதைப்பற்றி முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு. இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசாராமன்.

1991 செப்டம்பர் 13]

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், மதிய உணவு என்று ஆரம்பிக்கப்பட்டு பிறகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அது சத்துணவுத் திட்டமாக, மிக நல்ல முறையிலே விஸ்தரிக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற ஒரு நல்ல திட்டம். அதிலே வேலை செய்கின்ற ஆயாக்கள், அமைப்பாளர்கள், மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அரசு உடனடியாக ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களை நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற நிதி நெருக்கடியை மனதில் கொண்டு, இப்போதைக்கு அரசுக்கு அந்த எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் சில சத்துணவுப் பணியாளர்கள் அரசியல் ரீதியாகப் பழி வாங்கப்பட்டார்கள். அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த, தாய் உள்ளம் கொண்ட, இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரிப் புகார்கள் பல அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அரசியல் ரீதியாகப் பழி வாங்கப்பட்டுள்ளவர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்கும் என்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதியம் போதவில்லை என்கிற காரணம், பல தவறுகளுக்கு வழிவகை செய்கின்றது. ஒரு சத்துணவுக் கூடத்திலே ஜூன் மாதம் 31ஆம் தேதி கூட சத்துணவு வழங்கியிருக்கிறார்கள். ஜூன் மாதத்திற்கு 31ஆம் தேதியே கிடையாது. அந்தச் சத்துணவு அமைப்பாளர் தற்காலிகப்பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இது போன்ற முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

[1991 செப்டம்பர் 13

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முறைகேடுகள் நடக்காமல் பார்ப்பதற்கு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பல அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த அறிவுரைகளின்படி, இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடும் நடவடிக்கைகளை, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்குக் களங்கம் விளைவிக்காமல் இருக்கக் கூடிய அளவுக்கு எடுத்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிரந்தரப் பணியாக்கமும், பல்வேறு கோரிக்கைகளைப் பற்றியும், கோரிக்கைகளில் நியாயம் இருப்பின் அந்தக் கோரிக்கைகள், சத்துணவுப் பணியாளர்களுடைய கோரிக்கைகளில் நியாயம் இருந்தால், அந்தக் கோரிக்கைகள், புரட்சித் தலைவி அவர்களுடைய பரிசீலனைக்கு அனுப்பப்படும். ஆகவே, இப்போதைக்கு அவர்களின் ஊதிய உயர்வு என்கிற பேச்சுக்கு இந்த அரசிலே இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாம்பின் கால் பாம்பு அறியும் என்பார்கள்'. இப்போது சத்துணவு அமைப்பாளர்களாக இருக்கக் கூடிய பெண்கள், அந்த மாதச்சம்பளத்திலே ஒரு புடவை கூட வாங்க முடியாது. இந்த நிலையைப் போக்குவதற்கு இந்தத் தமிழக அரசு அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்திச் சற்றுக் கருணையோடு ஏற்றிக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே, அதிகமான தாய் உள்ளத்தையும், கருணை உள்ளத்தையும் பெற்றிருக்கிற முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் சத்துணவுப் பணியாளர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். ஆனால் தற்சமயம் அரசுக்கு எந்த எண்ணமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி மரியமுல் ஆசியா.

திருமதி மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்தில், சத்துணவுத் திட்டம், கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு வந்தது. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், உள்ளாட்சித் துறையின் கீழ்செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டது. அது மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் கல்வித்துறையின்கீழ் செயல்பட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அது தேவையில்லை என்று இந்த அரசு கருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் உணவு அருந்துகின்ற பிள்ளைகளுக்குத் தற்போது பெற்றோர்களின் வருட வருமானம் கேட்கின்றார்கள். அதை அரசு கேட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே வேலை செய்கின்ற ஆயாக்களுக்கு வயதுவரம்பு குறித்து மருத்துவர்களிடம் சான்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் அரசு கேட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பெற்றோரிடமும் அரசு எந்த வருமான வரம்பையும் கேட்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆயாக்கள் மருத்துவச்சான்றிதழ் வாங்க வேண்டும் என்று சொல்வது, 55 வயது, 60 வயது ஆனவர்கள் கூட இன்றும் பள்ளியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஒரு பொய்யான தகவலை அரசுக்குத் தரக்கூடாது என்ற அடிப்படையில்தான் அவர்களுடைய வயது வரம்பினை இன்றைக்கு மருத்துவச் சான்றிதழ் மூலம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. 11—9—1991 ஆம் நாளன்று அவையில் பயன்படுத்தப் பட்ட 'பேய்' என்ற சொல் குறித்து சில பத்திரிகையாளர்கள் கோரிய விளக்கத்திற்குப் பேரவைத் தலைவர் வழங்கிய தீர்ப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஒரு முக்கிய செய்தி. நேற்றைக்கு முன்தினம் அவையில் ஒரு பிரச்சினை பற்றி எழுப்பப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதில் கலந்து கொண்டு தன்னுடைய விளக்கத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோளையும் எடுத்து வைத்தார்கள், அப்போது இந்த